★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: புரட்டாசி 27உ வெள்ளி (12—10—56) ★ ★ வெளியீடு: புரட்டாசி 28உ சனி (13—10—56) [இதழ் 106

ஆயிரத்திற்கு மேற்பட்ட பிரதேச மொழிகள்

உலகத்தின் பல்வேறு பகுதிகளில் பேசப்படுகின்றன

உலகத்தின் பல்வேறு பகுதிகளில் இன்று ஆயிரத்திற்கு மேற்பட்ட பிரதேச மொழிகள் வழங்கப்படுகின்றன என்று ஐ. நா. கல்வி—விஞ்ஞான—கலாச்சார நிறுவனம் கூறுகிறது. இத்தொகையில் பல்லாயிரக்கணக்கான கிளை மொழிகளும் அவற்றின் 'திரிபு'களும் சேர்க்கப்படவில்லை. ஆப்பிரிக்காவில் மட்டும் ஓராயிரம் கிளை மொழிகளும், அவற்றின் 'திரிபு'களும் உள்ளனவாம்.

தலைமை நிலையச் செய்தி:

தேர்தல் ஆய்வுக்குழு சுற்றுப்பயணம் துவக்கம்

அண்ணா அவர்களது ஆலோசனைகளையும் கருத்துரைகளையும் கேட்டறிந்தனர்

இன்று காலை 'அறிவக'த்திலிருந்து அண்ணா வழியனுப்பி வைத்தார்

சென்னை, அக். 12—

தேர்தல் ஆய்வுக் குழுவினர், அறிவிக்கப்பட்ட திட்டப்படி சுற்றுப்பயணத்தை மேற்கொள்ளுவதற்காக, இன்று காலை 7-30 மணியளவில் சென்னையிலிருந்து புறப்பட்டனர்.

பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தேர்தல் ஆய்வுக்குழு உறுப்பினர்களான தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோரும் கார் மூலம் சென்னை 'அறிவக'த்திலிருந்து புறப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் நேற்று இரவு ஒன்பது மணியளவில், 'அறிவக'த்தில் அண்ணா அவர்களைச் சந்தித்து, அவரது ஆலோசனைகளையும், கருத்துரைகளையும் பெற்றுக்கொண்டனர்.

அண்ணா அவர்கள், குழுவினருடன் நீண்ட நேரம் உரையாடி கருத்துரைகள் வழங்கினர்.

வழியனுப்பு

இன்று காலை 7-30 மணி சுமாருக்குத் தேர்தல் ஆய்வுக் குழுவினர் 'அறிவக'த்திலிருந்து கார் மூலம் புறப்பட்டபோது, அண்ணா அவர்கள், குழுவினருக்கு நல்லாசிகூறி அவர்களை மகிழ்ச்சியோடு வழியனுப்பி வைத்தார்கள்.

தன்னால் இயன்றதை செய்துவிட்டதாம்!

வாஷிங்டன், அக். 11—

நீர்வளிக்குண்டை சர்வதேசக் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்துவதையும், அணுசக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்துவதையும் குறித்து, அமெரிக்கா தன்னால் இயன்றதை செய்துவிட்டதென்று அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர் கூறியுள்ளார்.

(3-ம் கலத்தின் தொடர்ச்சி)

குள் தாக்கல் செய்திருக்கவேண்டும்; ஆனால், அவை இரண்டு ஆண்டுகள் கழித்தே அறிக்கை தந்தன. அதையும்கூடப் பரிசிலித்து எட்டு மாதங்களுக்குப் பிறகு சர்க்கார், 'அந்த அறிக்கைகள், குழுவினரால் ஒருமுகமாகத் தாக்கல் செய்யப்படவில்லை,' என்று கண்டு, மறு பரிசிலனைக்கு அனுப்பினர்; இப்படி சர்க்கார் வேண்டுமென்றே காலந்தாழ்த்தி வந்திருக்கின்றனர்" என்று அந்த உறுப்பினர் எடுத்துரைத்திருக்கிறார்.

உண்ணாவிரதமிருக்கும் சங்கரலிங்கம்

மதுரை மருத்துவமனையில் 'இஞ்செக்ஷன்' தரப்படுகிறாராம்!

மதுரை, அக் 11—

கடந்த 76 நாட்களாக சென்னை மாநிலத்திற்குத் தமிழ்நாடு என்று பெயரிடப்பட வேண்டும் என்று கோரி உண்ணாவிரதமிருக்கும் சங்கரலிங்கம் உடல் நிலையில் சிறிது அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

அவர் தற்சமயம், மதுரை எர்ஸ்கின் மருத்துவ நிலையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு குளூகோஸ் இஞ்செக்ஷனும், பால், பழரசம் ஆகியவையும் கொடுக்கப்பட்டு வரப்படுவதாகவும், என்றாலும், அவர் மிகவும் பலவீனமாக உள்ளார் என்றும் கூறப்படுகிறது.

கிரிக்கெட் 'டெஸ்ட்'

ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்குமிடையே இம்மாதம் 19ந் தேதியன்று சென்னை ஸ்டேடியத்தில் முதல் கிரிக்கெட் டெஸ்ட் ஆரம்பமாகிறது.

ஐதராபாத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

மின்சார நிலையத்தைத் தாக்க முயற்சித்ததாக மந்திரி குற்றச்சாட்டு

ஐதராபாத், அக். 11—

ஐதராபாத் நகரில் உள்ள மின்சார நிலையத்தின் சில முக்கியமான இயந்திரங்களை நிர்மூலமாக்குவதற்கு, வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளரில் சிலர் முயற்சித்ததாக மந்திரி ஒருவர் சட்டசபையில் தகவல் தந்திருக்கிறார்.

'நிர்ப்பந்தத்தினால் சர்க்காரைப் பணிய வைக்க முடியாது' என்று முதன் மந்திரி, சட்டசபையில், வேலை நிறுத்தத்தை நடத்தும் தொழிலாளர் தலைவர்களை எச்சரித்தாராம்.

'வேலை நிறுத்தத்திற்குக் காரணமே சர்க்காரின் அலட்சியப் போக்குதான்' என்று தொழிலாளர் தலைவர் ஒருவர் கூறியதும், சட்டசபையில் மறுக்கப்பட்டதாம்.

'மாநிலம் துண்டாடப்படுகிற இந்த நேரத்தில், தொழிலாளர்களுக்குக் கூலிஉயர்வு தருவது என்பது முடியாத காரியம்' என்றும் கூறப்பட்டதாம்

ஆனால், 'சர்க்காரின் இந்தவாதம் தவறானது' என்பதை சோஷலிஸ்டு உறுப்பினர் ஒருவர் தெளிவாக்கியிருக்கிறார்.

"தொழிலாளருக்கும் — சர்க்காருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படி, கூலி நிர்ணய போர்டுகள் தங்களின் அறிக்கைகளை மூன்று மாதங்களுக்

(1-ம் கலம் பார்க்க)

'காஷ்மீர் - இந்தியாவின் ஒரு பகுதி'

'ஆனாலும் தனிக் கொடி உண்டு'

விநோதமான அரசியல் சட்டம் தாக்கல்

புதுடில்லி, அக். 10—

ஜம்மு—காஷ்மீர் அரசியல் நிர்ணய சபையில், அப்பிரதேசத்திற்கான நகல் அரசியல் சட்டம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

159 பிரிவுகள் கொண்ட அந்த அரசியல் சட்டம், ஜம்மு—காஷ்மீர் பகுதிகள், இந்தியாவில் இணைந்த பகுதிகள் என்று கூறுகின்றனவாம்.

கடந்த 1947-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 16-ம் நாளன்று காஷ்மீர் மகாராஜாவின் சுய ஆதிபத்தியத்திற்கு உட்பட்டிருந்த பகுதிகள் அனைத்தும், இந்த அரசியல் சட்டத்திற்கு உட்பட்டன என்றும் அந்த நகல் திட்டம் கூறுகிறதாம்.

நீதி—சுதந்திரம்—சமத்துவம்—சகோதரத்துவம் ஆகியவையின் அடிப்படையில் இந்த நகல் திட்டம் அமைகிறதாம்.

இந்த நகல் திட்டப்படி, காஷ்மீர் 'ராஜ்ய'த்தின் நிர்வாகத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவாராம். அப்படித் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர் 'இந்தியக் குடியரசுத் தலைவரின் அங்கீகாரத்துடன், அவர் விருப்பத்திற்கு ஒப்பப் பதவியிலிருப்பாராம்

இந்தியாவின் மக்கள் சபை, எந்தெந்தத் துறைகளில் சட்டமியற்றுவதற்கு உரிமையுடையதோ அவை நீங்கலான விவகாரங்களைக் கவனிக்கவும், சட்டமியற்றிக் கொள்ளவுமாக 100 பேர்கொண்ட சட்டசபை ஒன்றும், 36 பேர் கொண்ட மேல் சபை ஒன்றும் அமையுமாம். இந்தச் சட்டசபை நிர்வாகத்தில் மந்திரி சபையும் உருவாக்கப்படுமாம்.

'இப்போது பாகிஸ்தான் ஆதிக்கத்தில் உள்ள பகுதிகளுக்காக—அந்த ஆதிக்கம் நீங்கிய பிறகு, அனுபவித்துக் கொள்ளவென்று—இப்போதைய 100 பேர் கொண்ட சட்டசபையில் 25 இடங்கள் ஒதுக்கிவைக்கப்படும்' என்றும் நகல் திட்டம் கூறுகிறது.

காஷ்மீரின் ஆட்சி மொழி உருதுவாக இருக்கும் என்றும், ஆனால் ஆங்கிலமும் சட்டசபை—சர்க்கார் நிர்வாகத்திற்குத் தொடர்ந்து பயன்படுத்தப்படும் என்றும், கலை—கலாச்சார மொழி வளர்ச்சிக்காக ஒரு கழகம் நிறுவப்படும் என்றும் திட்டம் தெரிவிக்கிறது.

இந்த அரசியல் சட்டப்படி காஷ்மீருக்குத் தனிக் கொடியும் இருக்குமாம்.

நகல் திட்டம், 'காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி' என்று கூறுவதால், இந்த நிலையை மாற்றுவதற்காக எந்த ஒரு திருத்தத்தையும் சட்டத்திற்குக் கொண்டு வர முடியாது என்றும் விதிக்கிறதாம்.

★

எதிர்க்கட்சியினர் வெளி நடப்பு

'ஷேக்அப்துல்லா சிறைப்பட்டபின் சபை உயிரிழந்துவிட்டது' எனக் குரல்

ஜம்மு—காஷ்மீர் பிரதேசத்திற்கான அரசியல் சட்டம், அரசியல் நிர்ணய சபையில் தாக்கல் செய்யப்பட்டபொழுது சபையிலிருந்து எதிர்க்கட்சியினர் வெளி நடப்பு செய்தனர் என்று தெரியவருகிறது.

வெளிவந்த நான்கு எதிர்க்கட்சியினரின் தலைவரான குலாம் முகம்மது ஹமாதனி என்பார், 'அரசியல் சட்டம் சபையில் தாக்கலாவதை எதிர்த்து நாங்கள் வெளி வந்ததற்குக் காரணம், ஷேக் அப்துல்லா கைது செய்யப்பட்ட 1953 ஆக. 9-ந் தேதியிலிருந்து இந்தச் சபை, அதன் பிரதிநிதித்துவத் தகுதியை இழந்துவிட்டது; பல பெரும் தலைவர்கள் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டு, கைதாகி இன்னும் சிறையிலிருந்து வருகின்றனர்—என்பதுதான்,' என்று, பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார் எனத் தெரியவருகிறது.

இந்த அரசியல் நிர்ணய சபையில் பேசிய பிரதம மந்திரி பக்ஷி குலாம் முகம்மது, 'இந்தச் சபையில் மேற்கொள்ளப்படும் முடிவுகளை உலகில் எந்த சக்தியாலும் மாற்றிவிட முடியாது,' என்று பேசினாராம்!

ஷேக் அப்துல்லா தொடர்பான காரியம் இன்று முடிவுறுவதற்காகத்தான் மகிழ்ச்சியடைவதாகவும் அவர் கூறினாராம்.

எத்தியோப்பியா மன்னர் சென்னை வருகிறார்

எத்தியோப்பிய மன்னர் ஹெய்லி செலாசி அக். 28-ந்தேதியன்று சென்னைக்கு வருகை தருகிறார் எனத் தெரியவருகிறது.

இஸ்ரேல்—ஜோர்டான் எல்லையில் யுத்தம்?

அராபியர்-யூதர் மோதல் முற்றுகிறது

டெல்அவிவ், அக் 11—

1948-ல் நடைபெற்ற பாலஸ்தீன யுத்தத்திற்குப் பிறகு ஏற்பட்டுள்ள வெடிப்புகளில் எல்லாம் மிகப் பெரியது என்ற வர்ணனையுடன், ஜோர்டான்—இஸ்ரேல் எல்லையில் அராபியர்களும்—யூதர்களும் மோதிக்கொண்டிருக்கிற சம்பவம் குறித்து செய்தி தரப்பட்டிருக்கிறது.

இன்று காலைவரை, நேற்றுத் துவங்கிய தாக்குதல் நீடித்திருக்கிறது. இருதரப்பினரும், மோதுதலின் 'விளைவுகள்'பற்றிப் பலியானோரின் எண்ணிக்கைபற்றி முரண்பட்ட தகவல்கள் தந்திருக்கிறதாம்.

மந்திரிக்கு மாலைபோட்ட ஆசிரியர்

சர்க்காரின் ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளான ஆச்சரியம்!

குவாலியர், அக். 11—

மத்திய மந்திரி கேஸ்கருக்கு ஆசிரியர் ஒருவர், மத்திய பாரத் ஆசிரியர் சங்கச் சார்பில் மாலை அணிவித்தாராம். அதற்காக அவர்மீது சர்க்கார் நடவடிக்கை எடுத்ததாம்!

இந்தத் தகவல் சட்டசபையில் தரப்பட்டிருக்கிறது.

'ஏன் உம்மைத் தண்டிக்கக் கூடாது என்பதற்கான காரணம் காட்டுக,'

என்று சர்க்கார், அந்த ஆசிரியரைக் கேட்டதாகவும், அந்த ஆசிரியர் சமாதானம் கூறியதின் பேரில் மேற்கொண்டு எந்தவித நடவடிக்கையையும் அவர் மீது எடுக்கவில்லை என்றும் சட்டசபையில் கல்வி மந்திரி தெரிவித்திருக்கிறார்.

மேலும் அந்த ஆசிரியர் சங்கம் மாநில சர்க்கார் ஊழியர் ஒழுங்கு முறை விதிகளை வெகுவாக மீறி நடந்து வருவதால், அதன் அங்கீகாரத்தை சர்க்கார் திரும்பப்பெற்றுக்கொண்டது என்றும் மந்திரி கூறியதாகத் தெரியவருகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை . 12—10—'56 வெள்ளி

ஏன் இந்தச் சலுகை?

காஷ்மீர் முதல் குமரிவரை ஒரே கலாச்சாரம், பண்பாடு, உள்ளுணர்வு முதலியன பரவிக் கிடக்கின்றன எனவும், இந்தியத் துணைக்கண்டத்தின் ஒருமைப்பாட்டை வலியுறுத்த அதுவே போதுமானது எனவும், இந்தியப் பிரதமர் முதல் கக்கன் ஈறாகக் கூறிவருவதை மக்கள் கேட்டுக் கேட்டுச் சலித்துப் போயிருக்கின்றனர். இந்தப் பேச்சுக்கு ஒப்ப காஷ்மீர் ஆட்சி அமைப்பு முறையும், இந்தியப் பேரரசிற்கு உட்பட்டுள்ள மற்ற மாகாணங்களின் ஆட்சி அமைப்பு போன்றே அமைந்திருக்கும் என்பதைத்தான் பொதுமக்கள் எதிர்பார்ப்பர். ஆனல் மக்கள் எதிர்பார்ப்பதுபோல், காஷ்மீர் ஆட்சி அமைப்பு அமைந்திருக்கவில்லை.

மற்ற மாகாணங்களில் வழங்கிவரும் ஆட்சி அமைப்பு முறையைக் காஷ்மீர் ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. மற்ற மாகாணங்களுக்கு மாறுபட்ட வகையில், தனக்கெனத் தனிச் சலுகையுடன் கூடிய ஒரு தனியாட்சி அமைப்பை ஆக்கிக்கொள்ள காஷ்மீர் முனைந்திருக்கிறது.

இந்தியப் பேரரசின் அதிகாரத்தை, எந்த ஒரு துறையிலும் கட்டுப்படுத்தக்கூடியவகையில், மாகாண ஆட்சி அமைப்புகள் செயல்பட முடியாது. ஆனல் அந்தப் பொதுவிதி, காஷ்மீர் ஆட்சி அமைப்பைக் கட்டுப்படுத்தக் கூடியதாக இல்லை. அதாவது இந்தியப் பேரரசின் வரைகடந்த அதிகாரத்திற்குக் காஷ்மீர் ஆட்சி அமைப்பு கட்டுப்பாடு விதிக்க முன்வந்து இருக்கிறது.

தனக்கென ஒரு ஆட்சி அமைப்பை உருவாக்கிக் கொள்ள, மற்ற மாகாணங்கள் தங்களுக்கெனத் தனித்தனியாகப் பெற்றில்லாத உரிமையை காஷ்மீர் பெற்றிருப்பதே, ஒரு அரசியல் விசித்திரமாகும். எற்கனவே, காஷ்மீர் இருந்துவந்த நிலைமையில், தனக்கு விருப்பமான ஒரு அரசியல் அமைப்பை ஆக்கிக்கொள்ள அதற்கு உரிமை அளிக்கப்பட்டிருந்ததில் எதாவது நியாயமிருந்தாலும் இருக்கலாமேயல்லாது, இன்றைய நிலையில் அத்தகு உரிமை அதற்கு அளிக்கப்பட்டு இருப்பதில் நியாயமிருப்பதாக எண்ணுவதற்கில்லை.

பிராந்திய எகாதிபத்திய அமைப்பில், குடியேற்ற நாட்டு நிலை, காலனி நிலை போன்ற ஆட்சி முறைகள் இடம்பெற்று இருந்ததுபோல, இந்தியக் குடியரசு அமைப்பிலும் இருவகைப்பட்ட அதிகாரமுடைய மாகாண ஆட்சி அமைப்புகள் இருந்துவருவதற்கு என்ன நியாயமிருக்கிறது?

இந்தியக் குடியரசில் இணைந்துள்ள மற்ற மாகாணங்களைப் போலவே காஷ்மீரும் ஒரு உறுப்பாகும். பிறமாகாணத்தில் பிறந்தவர்களைக் குறிப்பிட்டு வேறு மாகாணங்களுக்கு அரசாங்கத் தலைவர்களாக இந்தியப் பேரரசு நியமித்து வருவது போன்று, காஷ்மீரின் அரசாங்கத் தலைவரை நியமிக்கும் உரிமை இந்தியப் பேரரசிற்குக் கிடையாது. காஷ்மீர் அரசாங்கத் தலைவரை நியமிக்கும் உரிமை காஷ்மீர் சட்டசபைக்கு மட்டுமே உண்டு. அதற்கு ஒப்புதல் தரவேண்டிய கடமை மட்டும்தான் இந்தியப் பேரரசிற்கு உண்டு.

காசிவாசியான கனம் பிரகாசா சென்னை ஆட்சி மன்றத் தலைவராக நியமினம் பெற்றது போலவும், ஒரிசா வாசியான மகதாப் பம்பாய் அரசாங்கத் தலைவராக ஆக்கப்பெற்றது போன்றும் மேற்கு வங்காளத்தவர் காஷ்மீரின் அரசாங்கத் தலைவராக நியமனம் பெறமுடியாது. காஷ்மீரின் அரசாங்கத் தலைவராக வருகிறவர்கள், காஷ்மீர் நாட்டில் பிறந்தவராக இருந்தாகவேண்டும். இந்த நிபந்தனையை விதித்து இருக்கிறது புதிய சட்டம்.

என்ன பொருள் இந்த ஏற்பாட்டிற்கு?

காஷ்மீரின் அரசாங்கத் தலைவர் ஒரு காஷ்மீரியாகவே இருப்பாரே அல்லாது 'இந்தியனாக' இருக்கமாட்டார் என்பது தானே பொருள்?

இதைக் குறுகிய பாலையப்பற்று என்பதா? அல்லது வகுப்புவாதம் என்பதா? அல்லது மொழிவெறி என்பதா? உலகக் கண்ணோட்ட உரிமையாளர்தான் இதற்குத் தகுந்த விளக்கம் தந்தாக வேண்டும்.

காஷ்மீர் இந்தியத் துணைக் கண்டத்துடன் இணைந்துவிட்டதை உறுதி செய்யும் ஒரு விதியும் புதிய சட்டத்தில் இடம் பெற்று இருக்கிறது. அதுவுமன்றி, பாகிஸ்தான் ஆட்சியின் கீழ் இருந்துவரும் ஆசாத் காஷ்மீர் பகுதியும் இன்றைய காஷ்மீர் அதிகாரத்திற்கு உட்பட்டதே என வலியுறுத்திக் கூறும் விதி ஒன்றும் புதிய சட்டத்தில் இடம் பெற்று இருக்கிறது.

இவ்விதியில் அடங்கி இருக்கும் அரசியல் முக்கியத்துவத்தையும், பெரும் சிக்கலையும் விளக்கத் தேவை இல்லை.

பாகிஸ்தான் பாதுகாப்பின் கீழ் இருந்துவரும் ஆசாத் காஷ்மீர் பகுதியை எதிர்காலத்தில் காஷ்மீருடன் கண்டிப்பாக இணைத்துக் கொண்டாக வேண்டும் என்ற கருத்தில், அப்பகுதி மக்களுக்கும் சட்டசபையில் இடம் ஒதுக்கப்பட்டிருக்கும் ஒரு விதியையும் புதிய சட்டம் தாங்கிக்கொண்டு இருக்கிறது. இதன் காரணமாக, பாகிஸ்தானுக்கும் இந்தியப் பேரரசிற்கும் இருந்துவரும் மனக்கசப்பு மேலும் கூடுதலாவது எதிர்பார்க்கக் கூடியதேயாகும். நிற்க,

பாகிஸ்தானுக்கும், இந்தியத் துணைக்கண்டத்திற்கும் இருந்துவரும் மனக்கசப்புக்கே பெரிதும் மூலகாரணமாக இருந்து வருவது காஷ்மீர் பிரச்சினையாகும். காஷ்மீருக்காக, இந்தியப் பேரரசு செய்துள்ள உதவியும், கொடுத்துள்ள கடனும், வரைகடந்ததாகும். அப்படி அளவு மீறி உதவி செய்திருந்தும், மற்ற மாகாணங்கள் போல் தானும் ஒரு மாகாணமாக இந்தியப் பேரரசில் இணைந்து வாழ காஷ்மீர் விரும்பவில்லை. தனிச் சலுகை பெற்று, தனி ஆட்சி அமைப்பை உருவாக்கிக் கொண்டு, தனித் தன்மையைப் பாதுகாத்துக்கொண்டு, பெயரளவிற்கு இந்தியப் பேரரசுடன் இணைந்து வாழ்வதையே காஷ்மீர் விரும்புகிறது. அதற்கென ஒரு சட்டமும் ஆக்கிக் கொண்டது.

இந்தியப் பேரரசின் மனமுவந்த ஒத்துழைப்புடன் காஷ்மீர், தனி வாழ்விற்கு அடிகோலுகிறது. காஷ்மீர்கோரும் இச்சலுகையைக் கொடுக்க இந்தியப் பேரரசு ஏன் முன்வரவேண்டும் என்ற ஐயம் அனைவருக்கும் ஏற்பட்டே தீரும். இதற்குச் சமாதானம் கூறவேண்டிய கட்டாயம் இந்தியப் பேரரசிற்கு இருக்கிறது.

மத்திய உதவியை பம்பாய் மறுத்தது

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் நம்பிக்கை இல்லாததே காரணம்?

பம்பாய், அக். 10—

செயற்கை முறை குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் நம்பிக்கையில்லாத காரணத்தால், மத்திய அரசாங்கம் அளிக்க முன்வந்த உதவியை பம்பாய் அரசாங்கம் வேண்டாம் என்று கூறிவிட்டதாக பம்பாய் சுகாதார உதவி அமைச்சர் மேல் சபையில் கூறியுள்ளார்.

'டில்லி திணிக்கும் இந்தக் கோட்பாட்டிற்குப் பம்பாய் மாநில அரசாங்கம் எந்தவித ஊக்கமும் அளிக்காது' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கேட்டீரா, சேதி!

கடிகார 'ஸ்பிரிங்கில்' இருதயம்

பிரிஸ்டோ, அக். 9—

ஒருவனுடைய நோயுற்ற இருதயத்தில் ஆறு மாதங்களுக்குமுன் கடிகார 'ஸ்பிரிங்கு'கள் மூலம் தயாரிக்கப்பட்ட சிறு கதவைப் பொருத்தியதாகவும், அவர் இப்பொழுது சுகமாக இருக்கிறார் என்றும் இரண சிகிச்சைக் கல்லூரியில் பேசும்போது டாக்டர்கள் அறிவித்தனர்.

இந்த 'ஸ்பிரிங்கு'கள், தனிப்பட்ட உலோகக் கலவையால் தயாரிக்கப்பட்டதாகும். மனித ஆயுள் முழுவதும் அது அழியாதது என்றும் கூறப்பட்டுள்ளது

கண் கண்ணுடி உற்பத்திச் சாலை

கல்கத்தாவில் அமையுமாம்

பம்பாய், அக். 10—

ஆண்டுதோறும் சுமார் 250 டன் மூக்குக் கண்ணுடிக்கான கண்ணுடி உற்பத்திக்காகக் கல்கத்தாவில சீக்கிரமே டில்லி சர்க்கார் ஒரு தொழிற்சாலையை நிறுவுவார்களாம்!

இந்தத் தகவலை, உற்பத்தி இலாகா மந்திரி ரெட்டி தெரிவித்திருக்கிறர்.

அழகான புத்தர் சிலை கிடைத்ததாம்!

கர்னூல், அக். 9—

ஆந்திர மாநிலத்தின் கர்னூல் மாவட்டத்திலுள்ள ஆதோனி கிராமத்தில் ஒரு அழகான புத்தர் சிலையைக் கண்டெடுத்துள்ளனர். இது 16-ம் நூற்றுண்டைச் சேர்ந்தது என்று கருதப்படுகிறது.

சாலையைப் பழுது பார்க்கும் போது இந்தச் சிலை கிடைத்ததாம். அச்சிலை ஒரு கல் பீடத்தின்மேல் வைக்கப்பட்டு, சுற்றிலும் கற்பாறைகள் வைத்து மூடப்பட்டிருந்ததாம். அதன் பீடத்தில் புராதனக் கன்னட மொழியில் கல்வெட்டுகள் காணப்படுகின்றனவாம்.

'தற்காலிகமாக்' என்ற நிலையில்...!

8 ஆண்டுகளாக 500 பேர் பணியாற்றி வந்தனராம்

நாகபுரி, அக். 9—

மத்தியப் பிரதேசப் போலீஸ் இலாகாக்களில் பணியாற்றிவந்த 500 பேர், கடந்த எட்டு ஆண்டுகளாகத் 'தற்காலிகமாக'வே வேலை செய்துவந்தனராம்.

புதிய மாநில அமைப்பின்கீழ் அவர்களில் சிலர் பம்பாய் மாநிலத்திற்கும், சிலர் போபால் மாநிலத்திற்கும் போகவேண்டியிருப்பதால், அவர்களுடைய பதவிகள் அவசர அவசரமாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறதாம்.

இந்தத் தகவலை, எதிர்க் கட்சியைச் சேர்ந்த அன்வாரி என்பார் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில், முதலமைச்சர் சுக்லா சட்டசபையில் தெரிவித்தார்.

இளம்பிள்ளை வாத நோயாளிகள்

அமெரிக்காவில் குறைவாகி வருகின்றனராம்

1947-க்குப் பிறகு எந்த ஆண்டிலும் இருந்ததைவிட குறைவாகவே இவ்வாண்டு அமெரிக்காவில் இளம்பிள்ளை வாதம் ஏற்படக்கூடுமாம். 'சால்க் ஊசி மருந்து' மூலம் கிடைக்கும் வெற்றியளிக்கும் பாதுகாப்பு தான் இக்குறைவுக்குக் காரணமென்று நம்புகின்றனர்.

அமெரிக்காவில் 1955ல் 28,010 பேர்களுக்கும் கடந்த ஐந்தாண்டுகளில் சராசரி 39,000 பேர்களுக்கும் இளம்பிள்ளை வாதம் ஏற்பட்டது. இவ்வாண்டு இதுவரையிலும் 12,153 பேர்களுக்குத்தான் இந்நோய் ஏற்பட்டுள்ளது. சரியான முறையில் மூன்று தடவை ஊசி போட்டுக் கொண்டுள்ள 50 இலட்சம் பேர்களில் ஒருவருக்கேனும் இந்நோய் வரவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுத்த மக்களைத் திரும்பிப்பாராத எம். எல். ஏ.

காங்கிரஸ் பிரதிநிதிக்குத் தொகுதி மக்கள் கற்பித்த பாடம்!

ஐதராபாத், அக். 11—

சில தொகுதிகளில் காங்கிரஸ் எம்.எல்.ஏ.-க்கள், தேர்தல் வெற்றிக்குப் பிறகு, அத்தொகுதி மக்களுடன் தொடர்பே வைத்துக்கொள்ளவில்லை என்பதை ஐதராபாத் பிரதேசக் காங்கிரஸ் தலைவர் வெட்டவெளிச்சமாக்கியுள்ளார்

அவர் சமீபத்தில், பீடார் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தாராம்; அங்குள்ள மக்கள் அவரைப் பார்த்து, அந்தத் தொகுதி காங்கிரஸ் எம்.எல்.ஏ.-வின் புகைப்படம் ஒன்றையாகிலும் தரும்படி கேட்டனராம்.

அந்த எம்.எல்.ஏ. நேரில் வராவிட்டாலும், அவருடைய புகைப்படத்தையாகிலும் கொண்டாட்டங்களில் வைக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பினராம்.

தற்சமயம் அந்த எம்.எல்.ஏ.-வின் புகைப்படம் அவர்களிடம் இல்லாததால், அவருக்குப் பிரதிநிதியாக மூங்கில் தடி ஒன்றை அங்கு நட்டு வைத்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தார்களாம்!

சரியல்ல!

இது சரியல்ல!

"........இப்போது வெளியான ஒரு செய்தியைக் கவனித்தால், சென்னை கவர்னர் பம்பாய் கவர்னராக நியமிக்கப்பட்டார் என்று தெரிகிறது. மக்களாட்சிப் பண்பிற்கும் கொள்கைக்கும், இது போன்ற நிகழ்ச்சிகள் உடன்பாடானதல்ல என்று குறிப்பிட விரும்புகிறோம்.

"அரசியல் நிர்வாகத் துறையில் நீண்ட காலம் தொண்டு செய்த அனுபவம் முதிர்ந்தவர்கள் பலர் இருக்கும் போது, ஒரு சிலருக்குள்ளேயே சுற்றுப் பதவிகளாக இவற்றை அமைத்துக்கொள்வது முறையாகாது.

"சென்னை கவர்னரை பம்பாய் கவர்னராக மாற்றியதற்குக் காரணம், பம்பாய் கவர்னர் ஒரிசாவின் முதலமைச்சராக மாற்றப்பட்டிருப்பதேயாகும்.

"ஒரு மாகாணத்தின் கவர்னர் பதவியில் இருப்பவர் மற்றொரு மாகாணத்தின் முதலமைச்சராக மாற்றப்படும் இம்முறை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

"கவர்னர் பதவி கட்சிகளுக்கு அப்பாற்பட்டது. முதலமைச்சர் பதவி, கட்சித் தலைவருடைய பதவியாகும்.

"உயர்வு—தாழ்வு அற்ற தன்மையில் அரசியல் வாழ்க்கையில் குழப்பம் ஏற்படுத்தும் முறை இப்போது பின்பற்றப்படுகிறது."

—'தமிழ் நாடு'—10—10—56

மலேயா முதலில் உறுதிமொழி கேட்டது

சீனு மறுக்கவே பின்னர் விட்டுக்கொடுத்தது

கோலாலம்பூர், அக். 8—

மலேயாவுக்கும்—சீனுவுக்கும் இரப்பர் வர்த்தக ஒப்பந்தம் ஏற்படுத்த, மலேயா—சிங்கப்பூர் தொழில் தூதவர்கள் சீனு சென்றுள்ளனர்.

சீனு வாங்கும் இரப்பர், யுத்தத்திற்குப் பயன்படுத்தப்படமாட்டாது என்ற உறுதியளிக்குமாறு மலேயா அரசாங்கம் கோரியது; சீனு, 'அது வியாபார முறையல்ல' என்று மறுத்தது.

இப்போது, சீனு வாங்கும் இரப்பருக்கு எந்தவித உறுதி மொழியும் கேட்கப்படமாட்டாது என்று தெரிகிறது மலேயா அரசாங்கத்தின் நம்பிக்கையை அடிப்படையாகக்கொண்டு சீனுவுக்கு இரப்பர் ஏற்றுமதி செய்யப்படும்.

7,000 டன் இரப்பர் வாங்குவதற்கு மலேயாவுடன் சீனு ஒப்பந்தம் செய்துள்ளதாகவும் தெரிகிறது.

6,000 கிராமங்கள் வெள்ளத்தால் அவதி

கல்கத்தா அக். 10—

மேற்கு வங்க மாநிலத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினுல் சுமார் 6,000 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளனவாம். இது மாநிலத்தில் உள்ள மொத்த கிராமங்களில் நாலில் ஒரு பகுதிக்கும் சற்று அதிகமானதாம்.

நகரசபைக்கு சென்னை சர்க்கார் கடன் தருகிறது

சென்னை, அக். 10—

கழிவுப் பொருள்களை அகற்றிச் செல்லும் லாரிகள், தண்ணீர் வாகன்கள், சாலைகளைச் சுத்தப்படுத்தும் லாரிகள் ஆகியவைகளுக்காகக் கடனாக ரூ. 1,50,000 சென்னை நகரசபைக்கு அளிக்க சென்னை சர்க்கார் சம்மதித்துள்ளது.

மாவீரன் கே. வி. கே. சாமி மறைவுக்கு அனுதாபங்கள்

கொள்கை வீரன் கே. வி. கே. சாமி மறைவு குறித்து அத்தக் குடி தி. மு. கழகச் செயலாளர் தோழர் ஜோசப் அவர்களுக்கு, தி மு கழகத் துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசன், தோழர்கள் மு. கருணாநிதி, எம். ஆர். இராதா, சத்தியவாணிமுத்து அம்மையார், வண்டிப்பெரியார் அப்பாஸ், மலையாண்டிபட்டிணம் துரைசாமி, மதுரை மாணிக்கம், பீர்முகமது, சிதம்பரம் மலர் மன்னன் ஆகியோரும், மோக னூர், சென்னிமலை, இராசபாளையம், கடையநல்லூர், தாராபுரம், பாவூர் சத்திரம், மடத்தூர், மேட்டூர் அணை, கம்பம், சென்னை 16-வது வட்டம் தி. மு கழகக் கிளைகளும்—தந்தி மூலமும் ;

தோழர்கள் என். எஸ். இளங்கோ, ஏ. கோவிந்தசாமி எம்.எல் ஏ, பெங்களூர் எஸ். வி. பதி, பம்பாய்—தாராவி குறள்தாசன், வைகை கிருஷ்ணன், நாதன், சேத்துப்பட்டு வேலு, புரசை டி. எம். வி. ராசன், பொள்ளாச்சி ராமானுசம், சிவகாசி என். கே. குருசாமி, மேட்டுப்பாளையம் கோதண்டராமன், மணிமுத்தாறு கிருஷ்ணன், கணேசன், சென்னை சு. மு. ரத்தினம், மணப்பாறை காசிநாதன், திருத்துறைப் பூண்டி சுப்பிரமணியம், சென்னை நடராசன், உறையூர் சி. மாரியப்பன், 'விஜய' (காங்கிரஸ்வாரஇதழ்)ஆசிரியர் ஆகியோர் கடித மூலமும் ;

பண்ணைக்காடு, மசோபுரம், அம்பாசமுத்திரம், சென்னிமலை, மேட்டூர் அணை, தேவாரம், தருமபுரி, வல்லம்படுகை, திருப்பூர், கீழ்ப்பாவூர், கவுந்தப்பாடி, வெள்ளலூர், சின்ன சேலம், அம்பாயிரம் ஆகிய தி. மு. கழகக் கிளைகளும், சென்னிமலை திரு. வி. க. மன்றம், அருப்புக்கோட்டை சௌந்தரபாண்டியனார் படிப்பகம், திருப்பூர் திரு. வி. க. நாடக மன்றம், கணியூர் அழகிரி மன்றம், திருச்செங்கோடு மில் தொழிலாளர் சங்கம், கடையநல்லூர் பஞ்சாயத்து போர்டு, விருதுநகர் முனிசிபல் தொழிலாளர் சங்கம், ஈராச்சி கூட்டுறவு நாணய சங்கம், திருச்செங்கோடு சோஷலிஸ்ட் கட்சி ஆகிய அமைப்புகளும்—கடித மூலமும் அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்துள்ளனர்.

சென்னை 5-வது வட்டம்

30—9—56 காலை 9 மணியளவில் கிளைக் கழகத்தில் தோழர் எம் மோகனன் தலைமையில் நடைபெற்றது.

* * *

சென்னை—சூளை பேராசிரியர் சுந்தரனார் நாடகக் கலைக் கழகச் சார்பில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

அயன்புரம்

3—10—56-ல், பாரதிதாசன் நூல் நிலையச் செயற்குழுக் கூட்டம் தோழர் பி. வரதன் தலைமையில் நடைபெற்றபோது அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

திருவானைக்கா (திருச்சி)

30—9—56 இரவு 9½ மணிக்கு, கிளைக் கழகத்தில் தோழர் சி. வடிவேலு தலைமையில் நடைபெற்றது.

பாலராமபுரம் (தென் திருவாங்கூர்)

30—9—56 மாலை, எஸ். சி. எம். நூல் நிலைய மண்டபத்தில் தோழர் ஆ. அருணாசலம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தாத்தையங்கார்பேட்டை

5—10—56 மாலை 6 மணிக்கு, கிளைக் கழகத்தில் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

பல்லடம்

30—9—56 காலை 9 மணிக்கு, கழகப் பணிமனையில் நடைபெற்றது.

மேலப்பாளையம்

21—9—56ல் கழகக் கொடிகள் தாழப் பறக்கவிடப்பட்டன. தோழர் தெ. ந. ஆறுமுகம் தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது மாலையில் அத்துக்குடி சென்று இரங்கல் கூட்டம், ஊர்வலத்தில் தோழர்கள் கலந்துகொண்டனர்.

சந்தைப்புதுப்பாளையம்

7—10—56-ல், கிளைக் கழகத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

விராலிமலை

30—10—56-ல், கழக உறுப்பினர்களடங்கிய கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

உளுந்தூர்பேட்டை :

27—9—56ல் உளுந்தூர்பேட்டையில் தோழர் சொக்கலிங்கம் தலைமையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., மற்றும் பலர் பேசினர்.

காஞ்சீபுரம் :

30—9—56ல், தோழர் மா. நாராயணசாமி தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் மு கருணாநிதி, காஞ்சி - கல்யாண சுந்தரம், சி. வி. இராசகோபால், டி. வி. நாராயணசாமி, எஸ். முருகேசன், இரா. வெங்கடேசன் ஆகியோர் பேசினர்.

நீர்முள்ளிக்குட்டை

3—10—56-ல், தோழர் கே. வி கே. சாமியின் உருவப் படத்துடன் ஊர்வலமும், அனுதாபக் கூட்டமும் நடைபெற்றது.

கொத்தவாச்சேரி :

28—9—56ல், தோழர் கே. டி. பி. பழனிசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., மற்றும் பல தோழர்கள் பேசினர்.

வசிட்டபுரம் :

4—10—56ல், தோழர் மு. வேலன் தலைமையில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., சிங்காரம் ஆகியோர் பேசினர்.

அத்திப்பாளையம் :

30—9—56 இரவு 8 மணிக்கு, தி. மு. கழகத் திடலில் தோழர் இராசாக் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

கீழத்திருப்பூந்துருத்தி :

3-10-56 இரவு 9 மணிக்கு கழகக் கட்டிடத்தில் மோகநாதன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

வரகூர் :

3-10-56 மாலை 5-30 மணிக்கு, மௌன ஊர்வலம் புறப்பட்டு திரு. வி. க. படிப்பகத்தை அடைந்ததும் தோழர் மு. ஆறுமுகம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

பழவேற்காடு :

3-10-56 மாலை 4 மணிக்கு இளைஞர் முற்போக்குக் கழகச் சார்பில் மௌன ஊர்வலமும், தோழர் தா. வீ. குப்புசாமி தலைமையில் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

பிரம்மபுரம் :

7-10-56 இரவு 8 மணிக்கு நடைபெற்ற அறிவுவளர்ச்சிக் கழக உறுப்பினர் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

திருப்புத்தூர் : (இராமநாதபுரம் மாவட்டம்)

8-10-56ல் நடைபெற்ற அழகிரி படிப்பக உறுப்பினர் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

புதுவலசை :

2—10—56ல் மஜீத் திடலில் தோழர் திருமாறன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

பந்தநல்லூர் :

30—9—56 மாலை 4 மணிக்கு, தோழர் பி ஏ. லிங்கன் தலைமையில் மௌன ஊர்வலமும், பட்டி மைதானத்தில் தோழர் தி. துரைராசன் தலைமையில் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர். மதகு சாலை, செய்க்குன்னம், முன்னங்குடி, மேலக்காட்டூர் தி. மு கிளைக் கழகத் தோழர்கள் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டனர்.

கிருஷ்ணகிரி :

1-10-56 மாலை 6 மணிக்கு, காரனேஷன் மைதானத்தில் தோழர் என். நாரயணன் தலைமையில் நடைபெற்றது. தோழர் சி. பி சிற்றரசு மற்றும் பலர் பேசினர்.

பொரளை (இலங்கை):

25-9-56ல் கிளைக்கழகப் பணிமனையில் தோழர் அ. கார்வண்ணன் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் பலர் பேசினர்.

தேசமுகப்பேட்டை :

3-10-56 மாலை 6 மணிக்கு, கிளைக் கழகத்தில் தோழர் கே. சி. துரைசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

திருவிழுந்தூர் :

29-9-56 மாலை 6 மணிக்கு கடைவீதியில் தோழர் கா. மு. ஷெரீப் தலைமையில் நடைபெற்றது. தோழர் டி. கே. சீனுவாசன் மற்றும் பலர் பேசினர்.

பர்மா :

தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் பேடிகளால் தாக்கப்பட்டது குறித்துப் பர்மா வாழ் திராவிட இளைஞர்கள் சார்பில் தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதாகத் தோழர் விருதை வீரமணி (வி எஸ். நாதன்) அனுதாபச் செய்தி ஒன்று தலைமைக் கழகத்திற்கு அனுப்பியிருக்கிறார்.

செட்டிப்பல்லி :

5—10—56-ல் கிளைக் கழகப் பணிமனையில் தோழர் கோ. குணசீலன் தலைமையில் நடைபெற்றது. 5 நிமிட நேரம் மௌனம் மேற்கொள்ளப்பட்டது.

புதுப்பட்டி :

30—9—56 மாலை 6-மணிக்கு, திருவள்ளுவர் கலைமன்றத்தில் கூட்டம் நடைபெற்றது. 3 நிமிடம் மௌனம் மேற்கொள்ளப்பட்டது.

கோவை :

7—10—56 காலை 10-மணிக்கு, தோழர் டி. கதிர்வேல் தலைமையில் நடைபெற்ற கோவை அழகிரி சொற்பயிற்சி மன்றக் கூட்டத்தில் 'மறைந்த மாவீரர்கள்' என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசினர்.

ஏழாம் நூற்றாண்டுக் கால ஆபரணங்கள்

ஐதராபாத் அருகே அகப்பட்டன

ஐதராபாத், அக். 7

பழங்காலத்தியஆபரணங்கள் நிரம்பிய இரும்புப் பாத்திரம் ஒன்று பூமிக்கடியிலிருந்து அகப்பட்டிருக்கிறதாம்.

இது, நரசம்பட்டுதாலுகா (வாரங்கல் மாவட்டம்) வைச் சேர்ந்த கிராமம் ஒன்றில், 'லம்பாடிகள்' சிலர் நிலம் உழுதபோது கிடைத்திருக்கிறது.

உள்ளூர் ரெவினியூ அதிகாரி போலீசாரின் உதவியுடன் 'லம்பாடி'களிடமிருந்து அந்த நகைகளைக் கைப்பற்றியிருக்கிறார்

இந்த ஆபரணங்கள், சாராதியா காலத்தவ (ஏழு முதல் 14-ம் நூற்றாண்டு) என்றும் கூறப்படுகிறது.

தமிழ் நாடு தனியானல் வெளிநாட்டு உதவி கிடைக்காதாம்!

சுப்பிரமணியத்தின் பரம ஞான பண்டிதம்!

கோவை, அக். 8—

"சென்னை-எஞ்சினீயர்கள் இந்தியாவில் பல இடங்களில் நடைபெற்றுவரும் அணைக்கட்டு வேலைகளில் பங்கெடுத்து வருகிறார்கள்; உயர்ந்த நிலையையும் அடைந்து வருகிறார்கள்.

"மொழிப்பற்று வரவேற்கத் தக்கதே; ஆனால், மொழிவெறி ஆபத்தானது! மொழி வெறியை அடிப்படையாகக் கொண்டு துவக்கப்படும் கிளர்ச்சிகளை ஆதரிக்கக்கூடாது. இந்திய நாட்டு மக்கள் எல்லோரும் ஒன்று என்பதை மறந்துவிடக்கூடாது.

"தமிழ் நாடு தனியாகப் பிரிந்தால் ஒற்றுமை கெடும் என நேரு கவலைப்படுகிறார்; தனித் தமிழ் நாட்டுக் கிளர்ச்சிக்கு அவசியமே இல்லை."

என்று, சென்னை அரசாங்க நிதி அமைச்சர் சுப்பிரமணியம் இங்கு நடைபெற்ற இளைஞர் மாநாடு ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் பேசுகையில், 'இந்தியா பெரிய நாடாகவும், ஒற்றுமையாகவும் இருப்பதால் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள் தேவையான இயந்திரங்களை தருவதற்கு முன்வந்துள்ளன என்று கூறி, 'தமிழ் நாடு தனியாகப் பிரிந்தால், வெளிநாட்டு உதவி கிடைக்காது' என்று குறிப்பிட்டுவிட்டு, பெரிய தொழிற்சாலைகளைத் துவக்கவோ, வளம் பெறத் திட்டங்களை வகுத்து முன்னேறவோ முடியாது,' என்று கூறி, டில்லியின் ஆதிக்கத்திற்குத் துதிபாடியிருக்கிறார் அந்த அமைச்சர்.

மண் பாண்டத்தில் தங்க நாணயம்

விளையாடிக்கொண்டிருந்த குழந்தை கண்டெடுத்தது

பவானி, அக். 7—

கோபி தாலுகா கணக்கன்பாளையம் காட்டுப்பிரதேசத்தில் குழந்தை ஒன்று விளையாடிக் கொண்டிருந்தபோது, பல தங்க நாணயங்கள் கொண்ட மண் பாண்டம் ஒன்று அகப்பட்டதாம்.

இதனைக்கண்ட குழந்தை, தன்னுடனிருந்த மற்றொரு குழந்தைக்குப் பானையிலிருந்து ஒரு நாணயத்தை எடுத்துக்கொடுத்ததாம். இந்த நாணயம்தான், அந்தப் பொக்கிஷம் குறித்தத் தகவலை சர்க்காருக்குத் தந்திருக்கிறது. சர்க்கார், அந்த நாணயங்கள் முழுவதையும் கைப்பற்றுமுன் அவற்றில் 18 நாணயங்கள் உருக்கப்பட்டு ஒரு கட்டியாக வார்க்கப்பட்டு விட்டனவாம்.

இந்தத் தங்கக் கட்டி, குழந்தை வைத்திருந்த ஒரு நாணயம் ஆகியவையும் எஞ்சியவற்றுடன் உள்ளூர் ரெவின்யூ அலுவலகத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறதாம்.

நாணயம் ஒவ்வொன்றும் அரை சவரன் எடையுள்ளதாம்; அவற்றின் ஒரு புறத்தில் யானையின் உருவமும், மற்றொரு புறத்தில் தெளிவில்லாத படம் ஒன்றும் இடம் பெற்றிருக்கின்றனவாம்.

உங்கள் குறிப்புக்கு!

இராஜஸ்தான், உத்திரப்பிரதேசம், அசாம் மாநில சர்க்கார்களுக்குக் குறைந்த வருமான வகுப்பினருக்கான குடியிருப்பு வசதித் திட்டத்தின்கீழ் இந்திய சர்க்கார், 1956 ஆகஸ்ட் மாதத்தில் கடனுதவியாக மொத்தம் ரூ 76,73,000 வழங்கியுள்ளனர்.

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை பல்வேறு மாநிலங்களுக்குக் கடன்களாக மொத்தம் ரூ. 12,74,000 வழங்கப்பட்டிருக்கிறது.

நாத்தீகர் மாநாடு

ஆந்திராவில் நடைபெறும் ?

ஐதராபாத், அக். 11—

ஆந்திர மாநிலத்திலுள்ள நல்கொண்டா மாவட்டத்தில் சூரியப்பேட்டைஎனும்ஊரில்இயங்கிவரும் 'நாத்திகக் கேந்திரம்' இம்மாதம் 20, 21-ந் தேதிகளில் நாத்திகர்கள் மாநாடு ஒன்றைக் கூட்டுவதற்கு ஏற்பாடு செய்துவருகிறது.

இம்மாநாட்டில் கலந்துகொள்ள விரும்புகிறவர்கள் 'கடவுள் இல்லை' என்பதற்கு ஆதாரமாகச் சொந்த அனுபவங்களை எழுதி அனுப்ப வேண்டுமாம்.

கிராம ஆட்சியை சனநாயக முறையிலும், அகிம்சை அடிப்படையிலும் அமைக்க வேண்டுமென்பதே இந்த நிறுவனத்தின் அரசியல் நோக்கமாகும்.

மாநாடு நடைபெறுவதற்கு முன்பு ஒரு பெரிய ஊர்வலமும் உண்டு என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநாடு முடிந்ததும் ஒரு பொதுக்கூட்டமும் நடைபெறுமாம்.

வரம்பு மீறிய செய்கை அல்லவாம்!

உதவி அளிப்பதற்கு மாநில சர்க்காருக்கு உரிமைஉண்டாம்

நாகபுரி, அக். 9—

'மத்தியப் பிரதேச மாநிலத்திற்கு வெளியே உள்ள போபால் அரசாங்கத்திற்குப் புதிய கட்டிடம் அமைக்க மத்தியப் பிரதேச அரசாங்கம் ரூ 20 இலட்சம் ஒதுக்கியிருப்பது முறையல்ல' என்று சட்டசபை உறுப்பினர் தமஸ்கர் என்பார் எதிர்ப்புத் தெரிவித்தபோது, சபைத் தலைவர், 'மாநில அரசாங்கத்திற்கு அவ்வாறு உதவி அளிக்க உரிமை உண்டு' என்று கூறி, உறுப்பினர் ஆட்சேபணையை நிராகரித்தார்.

துணி விலைகள்

உபரி வரி விதிப்பால் பாதிக்கப்படவில்லையாம்

புதுடில்லி, அக். 10—

சில ரகத் துணிகளுக்கு உபரி வரி விதிப்பு அமுலான பின்னரும், துணி விலைகள் ஏறியிருந்தவை இப்போது இறங்கிவருவதாகச் சர்க்கார் குறிப்புகள் கூறுகின்றன.

சர்க்கார், துணி விலை குறித்து கூர்ந்து கவனித்துவருகின்றனராம்

இதே நிலைநீடிக்குமானால். உபரி வரி விதிப்பு குறித்து சர்க்கார் மீண்டும் பரிசீலனை செய்யுமாம்.

70 - கோடி மக்களை ஒதுக்கி வைப்பதா?

நியூயார்க்—

" அனைத்துலக அணுசக்தி நிலையத்தின் நடவடிக்கைகளில், 70 - கோடி மக்கள் தொகை கொண்ட சீன நாட்டைச் சேர்க்காமல் விலக்கி வைத்திருப்பது, அறிவுடைமையாகாது; அன்றியும், அது அபாயகரமான செயலுமாகும்," என்று, ஐ. நா. - விலுள்ள இந்திய நிரந்தரப் பிரதிநிதி கூறியுள்ளார்.

மூங்கிலிலிருந்து காகிதம்

புதிய முறை உருவாகியுள்ளதாம்

புதுடில்லி, அக். 10—

டேராடூன் வன ஆராய்ச்சி நிலையத்தில் இப்போது தொடர்ந்து செய்யப்பட்டு வந்துள்ள ஆராய்ச்சிகளின் பலனாய், 100 டன் மூங்கிலிலிருந்து சுமார் 70 டன் குறைந்த விலைக் காகிதம் தயாரிக்க ஒரு பக்குவமுறை உருவாகியிருக்கிறது. முன்பு அந்நிலையம் உருவாக்கிய முறைப்படி சுமார் 64 டன் காகிதம் கிடைக்க வழி இருந்தது.

புதிய முறையில், வேகவைக்கும் நேரம் கணிசமாகக் குறைந்துவிடுகிறது; நார்க்கூழாக மாற்ற வேண்டிய நாரின் அளவும் குறைந்து விடுகிறது.

விசைத்தறித் திணிப்பு

டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறும் விநோதமான காரணம்

சென்னை, அக். 9—

"தொழிலாளருக்குக் குறைந்த பட்சம் ஊதியம் மாதம் ரூ. 100 அல்லது ரூ. 110 ஆக நிர்ணயிக்கப்படும் காலம் வரும். அத்தகைய காலம் வரும்போது ஒரு நாளைக்கு ரூ. 5 கூலிக்குக் குறைவாகக் கைத்தறியில் வேலை செய்ய எவரும் முன் வரமாட்டார்கள்.

"அத்தகைய காலக் கட்டத்தை மனதில் கொண்டுதான், நாங்கள் இப்போது விசைத்தறிகளைப் புகுத்துவது பற்றிய சிந்தனைகளை மேற்கொண்டிருக்கிறோம்,'

என்று மத்திய நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறியுள்ளார்.

காங்கிரசில் கரையும் அகாலிதளம்

ஆசாத் விதிக்கும் நிபந்தனை!

அமிர்தசரஸ், அக் 11—

"காங்கிரஸ் கட்சியில் உறுப்பினராக உள்ள எந்தச் சீக்கியரும், காங்கிரஸ் முடிவை எதிர்த்து நடைபெறும் எந்தக் கிளர்ச்சியிலும் ஈடுபடக்கூடாது"

என்று, அகாலிதளப் பொதுச்செயலாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் மத்தியக் கல்வி அமைச்சர் ஆசாத் குறிப்பிட்டுள்ளார்.

'எந்தக் குறை ஏற்பட்டாலும் அதற்கு பரிகாரம் தேடும் வகையில் கிளர்ச்சி செய்வதோ, கண்டனக் குரல் எழுப்புவதோ, அகாலிதளத்திற்கும் காங்கிரசுக்கும் ஏற்பட்டுள்ள உடன்பாட்டின் உணர்ச்சிக்கு மாறுபட்டதாகும்" எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோவை மாவட்டத்தில் திராவிட முன்னேற்றக்கழகத் தேர்தல் ஆய்வுக் குழு

"கோவை மாவட்டத்தில் கீழ்க் கண்ட விவரப்படி தேர்தல் ஆய்வுக் குழுக் கூட்டம் நடைபெறும் :—

"காங்கயம், சென்னிமலை, ஈரோடு, பெருந்துறை, பவானி, கோபி, நம்பியூர் ஆகியதொகுதிகளுக்கு 14—10—56 மாலை 6-மணிக்கு, ஈரோடு பழைய இரயில்வே ஸ்டேஷன் கரூர் ரோடு வெங்கட நாய்க்கர் சத்திரத்திலும் ;

"திருப்பூர், பல்லடம், கோவை, கோவை ரூரல், சூலூர், அவிநாசி, மேட்டுப்பாளையம் ஆகிய தொகுதிகளுக்கு 15-10-56 காலை 9-மணிக்கு, கோவை முனிசிபல் டிராவலர்ஸ் பங்களாவிலும் ;

"உடுமலை, பொள்ளாச்சி, கோவில்பாளையம், தாராபுரம் ஆகிய தொகுதிகளுக்கு 15-10-56 மாலை 6மணிக்கு, உடுமலை டிராவலர்ஸ் பங்களாவிலும் நடைபெறும்.

"கிளைக் கழகச் செயலாளர்களும், மாவட்டப் பிரதிநிதிகளும், கழக ஆர்வங்கொண்ட தோழர்களும் தவறாது வருகைதந்து தங்கள் கருத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்"

—என்று, கோவை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ஈ. வெ. கி. சம்பத் அறிவிக்கிறார்.

காரைக்குடி இளங்கோ சொற்பயிற்சி மன்றத் துவக்கவிழா

14—10—56 மாலை 4 மணியளவில் காரைக்குடி நா. புதூரில் மேற்படி மன்றத் துவக்க விழா தோழர் முடியரசன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

கண்டமானடியில் அண்ணா நிகழ்ச்சிகள்

★

15—10—56 காலை 10-மணியளவில் விழுப்புரம் வட்டம் கண்டமானடியில் தோழர் எஸ். விநாயகம்—தோழியர் கமலம்மாள் திருமணம் அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர் ஏ. கோவிந்தசாமி M.L.A., மற்றும் பலர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

மாலை 4-மணிக்கு, அண்ணா அவர்கள் கே. வி. கே. சாமி மன்றத்தைத் திறந்து வைப்பார்.

* * *

மாலை 6-மணிக்கு, தோழர் ஏ. கோவிந்தசாமி M. L. A. தலைமையில் கழகப் பொதுக் கூட்டம் நடைபெறும். அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

வேலூர் கே. வி. கே. சாமி மன்றம்

7—10—56-ல் நடைபெற இருந்த மேற்படி மன்றச் செயற்குழுக் கூட்டம் பெருமழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டு, 14-10-56 காலை 10 மணிக்கு, சிறுவர் பூங்காவில் நடைபெற இருக்கிறது முன்னால் அழைப்புப்பெற்ற அனைவரும், இயக்க வளர்ச்சியில் ஆர்வங்கொண்ட தோழர்களும் கலந்து கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மதுரை—நெடுஞ்செழியன் மன்ற ஆண்டு விழா

14-10-56-ல், மதுரை மாகாளிப்பட்டி நெடுஞ்செழியன் திடலில் தோழர் மு. அறமன்னன் தலைமையில் மேற்படி மன்ற 5-வது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

தோழர் பி எஸ். மணியன் கழகக் கொடியேற்றுவார். தோழர்கள் சி. பி. சிற்றரசு, எஸ். முத்து சொற்பொழிவாற்றுவர்.

கழகக் கூட்டங்கள்

★

செயங்கொண்டம் :
காந்தி திடலில்
15—10—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : அ. மெத்துசலா
பேசுவோர் :
கி. மனோகரன்
கோ. சிவப்பெருமாள்

★

அகத்தியம்பள்ளி :
(அகத்தியர் கோயிலுக்கு எதிரில்)
தி. மு. கழகத் துவக்க விழா
14—10—56 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
என். எஸ். இளங்கோ
சிவ. கனகசுந்தரம்

★

இலுப்பூர் - சங்கரம்பந்தல்:
கடைத் தெருவில்
15—10—56 மாலை 6 மணிக்கு
தலைவர்: பொன். வரதராசன்
பேசுவோர் :
சி. பி. சிற்றரசு
சி. ஜம்பு

சேலம் மாவட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு:

"சேலம் மாவட்டம், தர்மபுரி கிருஷ்ணகிரி, அரூர் வட்டங்களைச் சார்ந்த கிளைக் கழகத் தோழர்கள், தேர்தல் ஆய்வுக் குழுவினரை கிருஷ்ணகிரியில் 13-10-56 மாலை 6 மணிக்குச் சந்திக்குமாறும் சேலம், ஆத்தூர், இராசிபுரம், நாமக்கல், திருச்செங்கோடு, ஓமலூர் ஆகிய வட்டங்களைச் சார்ந்த கிளைக் கழகத் தோழர்கள் சேலத்தில், சித்தேசுவரா சினிமாக் கொட்டகையில் 14-10-56 காலை 9 மணிக்குச் சந்திக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்"

என்று சேலம் மாவட்ட தி மு. கழகத் துணைச்செயலாளர் ப. இராமலிங்கம் அறிவிக்கிறார்.

புதுவை ஆசிரமத் தொழிலாளரின் உண்ணாநோன்பு

புதுவை அரவிந்த ஆசிரமக் கட்டிடத் தொழிலாளர்களுள் மூவர் 4-10-56-லிருந்தும், மற்றும் மூவர் 6-10-56-லிருந்தும் உண்ணா நோன்பு மேற்கொண்டு வருகின்றனர்.

அத்தொழிலாளர் சம்பந்தமாக அரசாங்கம் நியமித்த நிபுணர் செய்த தீர்ப்பை நடைமுறைக்குக் கொண்டுவரச் செய்யவும், விடுபட்ட 186 கட்டிடத் தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளச் செய்ய வேண்டும் என்பதுமே அவர்களுடைய உண்ணா நோன்புக்கான காரணம் என்று சொல்லப்படுகிறது.

புதுவை மாவட்டத்தில் இந்திய யூனியன் அரசியல் நிர்வாகத்தின் கீழ் மக்களின் நல்வாழ்வு நாளுக்கு நாள் தேய்ந்து வருவதோடு, மகிழ்ச்சியற்றப் போக்கும் பெருகிக் கொண்டே வருகின்றது. தொழிலாளர் துன்பமோ மேலும் மேலும் வளர்ந்த வண்ணம் இருந்துவருகிறது.

தகராறுக்கிடமற்ற நியாயமான ஒரு தொழிற் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர மனமின்றி, முதலாளிகள், நிர்ப்பந்த முறைகளைக் கையாள்வதும், அரசாங்கம் இதில் நேரிய முறையைக் கைக்கொள்ளாதிருப்பதும், பொது மக்களிடையே அதிருப்தி ஏற்படக் காரணமாயிருந்துவருகின்றது.

வேறு எக்காரணமிருப்பினும், ஆசிரமத் தொழிலாளர் உண்ணா நோன்பு நாள்நீடிப்பது நல்லதல்ல. ஆசிரம நிர்வாகத்தினரோ, இது பற்றிச் சிறிதும் கவலைப்படுவதாகக் காணோம்

காலநிலை ஏற்றதாயில்லை. மழை—குளிர் ஆகியவற்றால், உண்ணா நோன்பினர் விரைவில் சீர்கேடடையக்கூடும். விளைவு விபரீதமாக இடந்தராமல், ஆட்சியாளர் உடனடியாகத் தலையிட்டு, இது வகையில் நேரிய ஒழுங்குமுறை கண்டு, உண்ணா நோன்பாளர்களை அந் நோன்பினின்றும் காப்பாற்ற வேண்டும். (ந. க.)

★★

தேர்தல் ஆய்வுக் குழுச் சுற்றுப்பயணம்

★

அக்.	ஊர்	நேரம்	தங்கும் இடங்கள்
13 :	திருப்பத்தூர்	.... காலை 9 மணி	.... 58, சின்னக்கடை வீதி
,,	கிருஷ்ணகிரி	.... மாலை 6 ,,	.... கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இல்லம் கோவாப்பரேடிவ் காலனி
14 :	சேலம்	.... காலை 9 ,,	.... சித்தேசுவரா சினிமா தியேட்டர்
,,	ஈரோடு	.... மாலை 6 ,,	.... கரூர் ரோட், வெங்கட நாய்க்கர் சத்திரம்
15 :	கோயமுத்தூர்	.... காலை 9 ,,	.... முனிசிபல் வழிப்போக்கர் விடுதி (Travellers' Bungalow)
,,	உடுமலைப்பேட்டை	.... மாலை 6 ,,	.... முனிசிபல் வழிப்போக்கர் விடுதி
16 :	கரூர்	.... காலை 9 ,,	.... முனிசிபல் வழிப்போக்கர் விடுதி
,,	திருச்சி	.... மாலை 6 ,,	.... முனிசிபல் சத்திரம்
17 :	திண்டுக்கல்	.... காலை 9 ,,	
,,	பெரியகுளம்	.... மாலை 6 ,,	
18 :	மதுரை	.... காலை 9 ,,	
,,	விருதுநகர்	.... மாலை 6 ,,	.... மூசாபரி பங்களா
19 :	திருநெல்வேலி	.... காலை 9 ,,	.... பாளையங்கோட்டை, திருச்செந்தூர் ரோடு முருகன் ஐஸ் பாக்டரி மாடி (கிரைம் பிராஞ்சு போலீஸ் ஸ்டேஷன் அருகில்)
,,	நாகர்கோவில்	.... மாலை 6 ,,	.... நாஞ்சில் மாவட்ட தி. மு. கழக அலுவலகம்
20 :	ஓய்வு		
21 :	காரைக்குடி	.... மாலை 6 ,,	.... 'இயூமன் காட்டேஜ்'—Human Cottage 5. முத்துப்பட்டிணம் 4-வது தெரு
22 :	பட்டுக்கோட்டை	.... காலை 9 ,,	.... காசாங்குளம் வடகரை சத்திரம் ஓய்வுவிடுதி
,,	தஞ்சை	பிற்பகல் 3 ,,	
,,	மாயவரம்	.... மாலை 6 ,,	.... முனிசிபல் ஓய்வு விடுதி (மாயூரம் சந்திப்பு அருகில்)
23 :	கடலூர் N. T.	.... காலை 9 ,,	.... மூசாபரி பங்களா

23—10—56 அன்று இரவு சென்னை வந்து சேருவார்கள்

'அறிவகம்' சென்னை
23—9—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★

சென்னை 43-வது வட்ட தி. மு. க. உறுப்பினர்கட்கு

14—10—56 பிற்பகல் 3 மணியளவில், மீர்சாகிப்பேட்டை சைவ முத்தைய முதலி 4-வது தெரு, எண் 6, இல்லத்தில், கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். நூல்நிலைய சட்டதிட்டம், மற்றும் பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படும்.

சென்னை 44-வது வட்ட தி.மு.க.செயற்குழுகூட்டம்

13—10—56 இரவு 9 மணிக்கு, சென்னை 44-வது வட்ட தி மு. கழகப் பணிமனையில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். கழக வரவு-செலவு, 7-ம் ஆண்டு விழா வரவு-செலவு, மற்றும் பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

சென்னை 46-வது வட்ட தி மு.க.செயற்குழுகூட்டம்

14—10—56 காலை $8\frac{1}{2}$ மணிக்கு சென்னை 46-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் (142 ஆன்வார் பேட்டை தெரு) செயற் கூட்டம் நடைபெறும். கிளைக் கழக வரவு-செலவு, மற்றும் பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக் கெடுத்துக்கொள்ளப்படும்.

சென்னை—சூளை தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

14—10—56 காலை, கிளைக் கழகப் பணிமனையில், செயற்குழுக் கூட்டம் நடைபெறும். கழக வரவு-செலவு, கழக ஆக்க வேலைகள், மற்றும் பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படும்.

அறந்தாங்கி வட்டக் கழக நிர்வாகிகளுக்கு :

"14—10—56 காலை 9 மணி அளவில் அறந்தாங்கி தி. மு கழக உறுப்பினர் கூட்டமும், மாலை 6 மணிக்கு அறந்தாங்கி வட்டக் கழக நிர்வாகிகள் கூட்டமும் அறந்தாங்கி திராவிட முன்னேற்றக் கழக இல்லத்தில் நடைபெறும். தேர்தல் ஆய்வுக் குழுவினரிடம் அறந்தாங்கி தொகுதி பற்றியத் தேர்தல் சூழ்நிலை ஆராயப்படும்"

என்று, தோழர் நா. மாரிமுத்து அறிவிக்கிறார்.

சிவகெங்கை நகர வர்த்தகர் சங்கத் திறப்பு விழா

14—10—56 மாலை $2\frac{1}{2}$ மணியளவில், சிவகெங்கை அரசர் உயர்நிலைப் பள்ளியில் திரு. வி. வி. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெறும். திரு. கேசவலால் காளிதாஸ் சேட் சங்கத்தைத் திறந்துவைப்பார். திரு. கி. ஆ. பெ. விசுவநாதம், சி. கே. எம். ஷெயது முகமது ஆகியோர் பேசுவார்கள்.

சென்னை—சூளை நகர இளைஞர் கழகம்

13—10—56 மாலை $6\frac{1}{2}$ மணியளவில் கழக மனையில், 12-ம் சுகாதார வாரப் படக் காட்சியும், 14—10—56 பகல் 3 மணி முதல் 6 மணிவரை இந்து யூனியன் கமிட்டி உயர்நிலைப் பள்ளியில் பொதுமக்கள் அனைவருக்கும் இலவசமாக உடல் பரிசோதனையும் நடைபெறும்.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

13—10—56 மாலை 6-30 மணியளவில், சென்னை—முத்தியாலுப் பேட்டை சாலைவிநாயகர் கோயில் தெரு, எண் 17 முத்தமிழ் மன்றப் பணிமனையில் தோழர் தெ. அன்பரசு தலைமையில் 'கொள்கை வீரர்கள்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ். செழியன் எம். ஏ.